**சிறிய மற்றும் சிறுகைத்தொழில் தலைவர் மற்றும் தொழிலதிபர் ஊக்குவிப்பு செயற்திட்டம் III இன் சுழற்சி நிதியம் (எஸ்எம்ஐஎல்ஈ - III) 2013**

---

சிறிய மற்றும் சிறுகைத்தொழில் தலைவர் மற்றும் தொழிலதிபர் ஊக்குவிப்பு செயற்திட்டம் III இன் சுழற்சி நிதியத்தின் (எஸ்எம்ஐஎல்ஈ - III) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் (ஜேபீஐசீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2004 திசெம்பர் 07 ஆந் திகதிய எஸ்எல்- பி81 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 3(8) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

எஸ்எம்ஐஎல்ஈ III சுழற்சி நிதியத்தின் செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு சுழற்சி நிதியத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சிறிய மற்றும் சிறுகைத்தொழில்களிற்கு முதல் வழங்குதல், முகாமைத்துவ அபிவிருத்தி, கணக்கீடு மற்றும் சிறிய மற்றும் சிறுகைத்தொழில்களின் தொழில்நுட்ப தொழில்திறன் மற்றும் பொதுநபர் நிதி நிறுவனங்களின் நிறுவன ரீதியான இயலளவை வலுப்படுத்தல் என்பவற்றின் ஊடாக இலங்கையில் ஸ்திரமான மற்றும் சமப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சியே சுழற்சி நிதியத்தின் குறிக்கோளாகும். எஸ்எம்ஐஎல்ஈ III செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஜப்பான யென் 9,619 மில்லியனாக இருந்தது இது கடன் உடன்படிக்கையின் 03(6) ஆம் பிரிவின் கீழ் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியால் நிதியளிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் சில கடன் நிறுவனங்கள் மீள் கடன் செலுத்தல்களிற்காக சுழற்சி நிதியம் III சரிசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. மீள் கடன் செலுத்தல் நடைமுறை ஊடான திரண்ட நிதியம் பிரதான கடன் மீளளித்தல்களுக்கு பயன்படுத்தப்படும். செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம், எஸ்எம்ஐஎல்ஈ III சுழற்சி நிதியம் 2012 மே 01 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும்

மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) சுழற்சி நிதியத்தின் முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், சுழற்சி நிதிய தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) சுழற்சி நிதியச் செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், சுழற்சி நிதியத் தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) சுழற்சி நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) சுழற்சி நிதியத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர, சுழற்சி நிதியமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுழற்சி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சுழற்சி நிதியத்தின் மொத்த பணவளிப்பு ரூபா 184,146,720 ஆகும். மீளாய்வாண்டிற்கான சுழற்சி நிதியத்தின் செயற்பாடுகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளன.

| பங்குபற்றல் கடன் நிறுவனங்கள் (பிசீஜஎஸ்) | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணவளிப்புச் செய்யப்பட்ட தொகை |
|---|---|
| | ரூபா |
| வர்த்தக வங்கி (சீபீ) | 8,000,000 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (டிஎவ்சீசீ) | 34,080,000 |
| தேசிய அபிவிருத்தி வங்கி (என்டிபீ) | 14,400,000 |
| சம்பத் வங்கி (எஸ்பீ) | 13,840,000 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி (ஆர்டிபீ) | 5,160,000 |
| ஹட்டன் நஷனல் வங்கி (எச்என்பீ) | 68,315,200 |
| சேலான் வங்கி | 37,951,520 |
| மக்கள் வங்கி | 2,400,000 |
| இலங்கை வங்கி | - |
| மொத்தம் | 184,146,720 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்டுகின்றன.

(அ) 2012 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த எஸ்எம்ஜஎல்ஈ III செயற்திட்டத்தின் கீழ் 2012 இல் ஏற்பட்ட ரூபா 4,053,037 கூட்டு மொத்தத் தொகையான நிர்வாக மற்றும் ஏனைய கிரயங்கள் சுழற்சி நிதியத்தின் கிரயமாக மாற்றப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மக்கள் வங்கியால் 2013 நவம்பர் 04 இல் வழங்கப்பட்ட துணைநிலைக் கடன்களில் ரூபா 129,300 தொகையான பெறவேண்டிய வட்டி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சுழற்சி நிதியமானது இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட எஸ்எம்ஜஎல்ஈ III சுழற்சி நிதியத்திலிருந்து முற்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 8,902,326,944 தொகையான நிதியத்தின் மீதிகளை பயன்படுத்தியிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அந்த அளவு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6 நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த அறிக்கையின் பந்தி 4.1 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பங்குபற்றல் கடன் நிறுவனங்களால் வழங்கப்பட்ட ரூபா 184,146,720 கூட்டு மொத்தத் தொகையான துணைக் கடன்களின் மொத்தப் பெறுகைகளில் ரூபா 140,346,720 பெறுமதியான துணைக் கடன்கள் 03 பங்குபற்றல் கடன் நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இலங்கை வங்கி இந்த சுழற்சி நிதிய ஒழுங்கமைப்புகளின் கீழ் எவ்வித கடன்களையும் வழங்கியிருக்கவில்லை.

(ஆ) பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 300,000,000 ஆன மொத்த ஒதுக்கீட்டில் துணைக் கடன்கள் வழங்குவதற்காகவும் நிர்வாக நோக்கத்திற்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 186,554,529 ஆக தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) சுழற்சி நிதிய முகாமைத்துவ பிரிவு 2012 மே மாதத்தில் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் துணைக் கடன்களின் பணவளிப்பு 2013 நவம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டிருந்தது.

(ஈ) செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம், துணைக் கடன்கள் தொழில்நுட்ப உதவி மற்றும் பொது நோக்கம் ஆகிய பெயரிலான இரு நோக்கங்களிற்காக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப உதவி நோக்கத்திற்காக எவ்வித துணைக் கடன்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.
பொது நோக்கத்தற்காக வழங்கப்பட்ட துணைக் கடன்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. பிளாஸ்ரிக், லதர் மற்றும் பேப்பர் போன்ற ஒவ்வொரு உற்பத்திகளான கைத்தொழில்களிற்காக துணைக் கடன்களிற்காக மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பொது நோக்கங்களின் கீழ் துணைக் கடன்கள் வழங்கவதற்காக துறைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்த இரசாயண உற்பத்தி நோக்கத்திற்காக எவ்வித துணைக் கடன்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2013 ஆம் ஆண்டின் போதான மொத்த பணவளிப்பில், மொத்த ஒதுக்கீட்டில் 57 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 105.72 மில்லியன் தொகை உணவு உற்பத்தி, பாணம், புகையிலை மற்றும் மீன்பிடி போன்ற மூன்று துறைகளிற்காக மாத்திரம் செய்யப்பட்டிருந்ததுடன் வித்தியாசமான துறைகளிற்காக கடன் பெறுகைகளின் களின் வழமைக்குமாறான பணவளிப்பு எனக் குறிப்பிடப்பட்ட வேறு 11 துறைகளிற்கு இடையில் ரூபா 75.23 மில்லியன் மீதி பங்கிடப்பட்டிருந்தது.

iii. சுழற்சி நிதியத்தின் செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம், மீன்பிடி, விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மைத் துறைகளில் துணைக் கடன்கள் வழங்குவதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், பங்குபற்றல் கடன் நிறுவனங்கள் வழங்கப்பட்ட மொத்தக் கடன் பெறுமதியின் 3 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5.59 மில்லியன் பெறுமதியான அத்தகைய துறைகளிற்காக மூன்று துணைக் கடன்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

iv. மேலும், பொது நோக்கத்திற்கான துணைக் கடனின் மொத்தப் பணவளிப்பில் 37 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 68,626,720 ஆன தொகை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள தொழில் முயற்சிகளிற்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தது. செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம், கிராமப் பகுதிகளிற்கு துணைக்கடன்கள் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது மாத்தளை, நுவரெலியா, மொனறாகலை, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் போன்ற இலக்கிடப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தொழில் முயற்சிகளிற்காக எவ்வித துணைக் கடன்களும் பணவளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிய பணவளிப்பு
(ஆ) காசு முகாமைத்துவம்